**நவம்பர் - 5**

**"தேவனுடைய வீட்டின் மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்." - எபி 10 . 21,22.**

அந்த நல்ல வேலையை ஆரம்பித்திருக்கிற அவர் ஒருபொழுதும் மாறுகிறதில்லை என்பதையும், நம்முடைய இருதயம் அவரோடு இன்னமும் தெளிவானதாகவும், ஸ்திரமானதாகவும் இருந்தால் நாம் நம்முடைய சொந்த சித்தத்தை நாடாமல் ஆனால் நம்முடைய விவகாரங்களில் அவருடைய சித்தம் செய்யப்படும்படி நம்முடைய பிரதிஷ்டை இன்னமும் நிறைவானதும் பூரணமானதுமாயிருந்தால், பிறகு நிச்சயமாகவே நாம் விசுவாசத்தின் பூரணநிச்சயத்தை உடையவர்களாயிருக்கலாம். ஏனெனில், தேவன் மாறாதவராயிருக்கிறார் என்று அறிகிறதினாலும், நாம் இன்னமும் அவருடைய வாக்குத்தத்தங்களுக்கும், ஏற்பாடுகளுக்கும் இணக்கமாயிருக்கிறோமென்று அறிந்திருக்கிறதினாலும், அவருடைய எல்லா கிருபையுள்ள பராமரிப்புகளும் நமது சார்பாக இன்னமும் நடத்தப்படுகின்றன என்று நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம், என்பதையும் ஞாபகத்தில் வைப்போமாக. இதுதான் விசுவாசத்தின் பூரண நிச்சயம், கர்த்தரில் முழு நம்பிக்கை. **- Z 00, 170 (R 2642).**

தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், கிறிஸ்துவை நம்முடைய பிரதான ஆசாரியராக உடையவர்களாயிருக்கிறோம். இந்த உண்மை நம்முடைய அறியாமை, பிரியமில்லாத பலவீனங்கள், குற்றங்கள் இவையாவும் மூடப்படுகின்றன என்று உத்தரவாதமளிக்கிறது. இவ்விதமாக கர்த்தருடைய தயவில் தொடர்ந்து இருக்க நாம் சாத்தியமாக்கப்படுகிறோம். கீழான ஆசாரியர்கள் பொன்னான குத்து விளக்கின் அழகான வெளிச்சத்தை அனுபவித்துக் கொண்டு அதனிடத்திற்கும் அதன் பெலன் கொடுக்கிற ஆகாரத்தில் பங்கு பெற்றுக்கொண்டு சமூகத்தப்பங்கள் இருக்கிற மேஜையண்டைக்கும், சுகந்த வாசனையோடு பலி செலுத்திக் கொண்டு தூபபீடத்தண்டைக்கும், அதற்குப் பிறகு இரண்டாம் திரைக்கும் சமீபத்தில் கிட்டிச் சேர இது சாத்தியமாக்கிற்று. அவர்கள் இந்த இரண்டாம் திரையை மரணத்தினாலே கடந்து, கர்தரிலும், அவருடைய ஆயத்தம் பண்ணியிருந்த காரியங்களிலும் உண்மையுள்ள இருதயத்தோடும், சுத்த இருதயத்தோடும், முழுநிச்சயத்தோடும் தேவனுடைய நேர்சமூகத்தில் பிரவேசித்தார்கள். நாம் கிட்டிச் சேரக்கடவோம். **- P 36, 165.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**எபி 3.1-6, 4.14,16, 7.27; 1தீமோ 3.15; சங் 51.6; 1யோவா 3.21; யோவா 1.47; அப் 8.37; எபி 11.1-39; சங் 118,8,9, 125,1; நீதி 3.5, ஏசா 26.3, 30.15; மாற் 9.23,24; லூக் 17.5; ரோம 4.18-21, 15.13; கொலோ 1.23; எபி 13.5,6; யாக் 1.6; 1பேது 1.5,7,9,21; 1யோவா 5.4.**

**கோபுர வாசிப்பு : Z 14, 86 (R 5424).**

**வினாக்கள் : இந்த வசனம் இந்த வாரத்தில் எனக்கு எவ்வாறு பயன்பட்டது? அதைக் கொண்டு நான் என்ன செய்தேன்? அதன் பலாபலன் என்ன?**